பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

30 11 2025 6 45

ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- Ditwah புயல் அடுத்த 24 மணி நேரத்தில் வட தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதிகளுக்கு இணையாக வட திசையில் நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இதன் காரணமாக செங்கல்பட்டு, கடலூர், நாகை உள்ளிட்ட 6 மாவட்டங்களின் ஒருசில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த ஆய்வு மையம் கூறியுள்ளது.
- புயலால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.
- இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

Ditwah புயல் தமிழகத்தின் வட கடலோர பகுதியை நோக்கி நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தப் புயல் புதுச்சேரிக்கு தென்கிழக்கே 160 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னைக்கு தெற்கே 250 கிலோ மீட்டர் தொலைவிலும் நிலை கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, விழுப்புரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 12 கடலோர மாவட்டங்களின் ஒருசில இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதற்கிடையே புயல் குறித்து மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேச அதிகாரிகள் மற்றும் கடலோர காவல் படையைச் சேர்ந்த அதிகாரிகளுடன் உள்துறை அமைச்சகம் தொடர்புகொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, தெலங்கானா, ஆந்திரப்பிரதேச மாநிலங்களைச் சேர்ந்த தலைமைச் செயலாளர்களுடன் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உள்துறை செயலாளர் ஆலோசனை மேற்கொண்டார்.

இதனிடையே புயலால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. KKSSR. ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் தேவையான அளவு நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொதுமக்கள் அவசியமின்றி வெளியே வர வேண்டாம் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தமிழகத்தில் மின்வாரியமும் தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் புயல் காரணமாக நாகை மாவட்டத்தில் மின்தடை ஏற்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக கடலோரப் பகுதியில் கடலோர காவல் படையைச் சேர்ந்த 3 கப்பல்களும், ஒரு விமானமும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அவசர கால உதவிக்கு ஏதுவாக 14 பேரிடர் மீட்புக் குழு தயாராக உள்ள நிலையில், கூடுதலாக புனே மற்றும் வதோதராவில் இருந்து சென்னைக்கு தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே ரயில் பயணிகளின் பாதுகாப்பு கருதி தெற்கு ரயில்வே விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புயல் தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து தெற்கு ரயில்வே அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், ரயில்கள் மாற்றுப் பாதையில் இயக்கப்படுவது அல்லது ரத்து செய்யப்பட்டது குறித்த செய்திகளை பயணிகள் அறிந்துகொள்ள ஏதுவாக பிரத்யேக தொலைபேசி எண் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிலையில் அவசர கால கட்டுப்பாட்டு அறை இன்று முதல் செயல்பாட்டுக்கு வரும் என்று ரயில்வே தெரிவித்துள்ளது.

மத்திய சென்னை, எழும்பூர், சென்னை கடற்கரை, ஆவடி, பெரம்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்பேட்டை உள்ளிட்ட 14 முக்கிய இடங்களில் உள்ள ரயில்வே பாலங்கள் மற்றும் தண்ணீர் தேங்கும் பகுதிகளில் ரயில்வே அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

இதனிடையே Ditwah புயல் மற்றும் கனமழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் இரண்டாவது நாளாக இன்று 47 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கனமழை காரணமாக மயிலாடுதுறை மாவட்டத்தில் 182 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், 117 கால்நடைகள் உயிரிழந்துள்ளதாகவும் மாநில அமைச்சர் திரு. மெய்யநாதன் தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறையில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு நியாயவிலைக் கடைகள் மூலம் உணவுப் பொருட்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படும்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள வானொலி நிலையங்கள் இதனை அஞ்சல் செய்யும்.

**<<<<>>>>**

உயர் கல்வியில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், உயர்கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

உயர்கல்வி பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

சமூகநீதி, கல்வி மற்றும் அறிவியல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு மாநில அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கோவி. செழியன் கூறினார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

ஆஃப்கனிஸ்தானில் எந்தவொரு வன்முறைச் சம்பவத்திற்கும் எதிராக தக்க பதிலடி கொடுக்க பாதுகாப்புப் படை தயார் நிலையில் உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

யுக்ரைன் தலைநகர் கீவ் நகரை குறிவைத்து ரஷ்யா நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். 29 பேர் காயமடைந்தனர்.

**<<<<>>>>**

தாய்வான் எல்லைப் பகுதியில் சீனா மேற்கொண்டு வரும் ராணுவ நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், தேவைப்படும் பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் ஹரியானா மாநிலம் குருஷேத்ராவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் இன்று பங்கேற்கிறார்.

<<<<>>>>

மகாராஷ்டிரா, மத்தியப்பிரதேசம், குஜராத் மாநிலங்களில் 800 மில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பிலான 3 கடன் ஒப்பந்தங்களில் மத்திய அரசும் - ஆசிய வளர்ச்சி வங்கியும் கையெழுத்திட்டுள்ளன.

<<<<>>>>

மேற்குவங்கத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளில் எந்தவொரு தகுதியான வாக்காளரும் விடுபடக்கூடாது என்று அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரர் திருக்கோயில் தீபத் திருவிழாவின் ஒருபகுதியாக இன்று தேரோட்டம் நடைபெறுகிறது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் படுகர் சமுதாய மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான முன்னோர்களுக்கு படையலிட்டு வழிபடும் “சக்கலாத்தி” பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

<<<<>>>>

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அருகே நேரிட்ட சாலை விபத்தில் 2 பேர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் மணிமுக்தா அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரின் அளவு அதிகரிக்கப்பட வாய்ப்பு உள்ளதால் கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

## *விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராஞ்சியில் இப்போட்டி பிற்பகல் மணி 1.30க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா, ஓமனை வென்றது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் 17-0 என்ற கோல் கணக்கில் இந்தியா வெற்றி பெற்றது.

<<<<>>>>

உலகக்கோப்பை கலப்புக் குழு டேபிள் டென்னிஸ் போட்டி இன்று சீனாவில் தொடங்குகிறது.

Chengdu நகரில் நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியா இன்று குரேஷியாவை எதிர்கொள்கிறது.

<<<<>>>>